## இலங்கை வங்கி -2013

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றுக்கள், முழுமையான வருமானக் கூற்றுக்கள், மூலதனத்திலான மாற்றங்களின் கூற்றுக்கள் மற்றும் காசோட்டக் கூற்றுக்கள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றினை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை வங்கியின் (வங்கி) நிதிக்கூற்றுக்கள் மற்றும் வங்கி மற்றும் அதன் உதவிக்கம்பனிகளின் (தொகுதி) ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் என்பவற்றின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வை மேற்கொள்வதில் பொதுச் சேவையிலுள்ள பட்டயந் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவி பெறப்பட்டது. உதவிக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் சம்பந்தப்பட்ட உதவிக் கம்பனிகளின் உறுப்பினர்களைால் நியமிக்கப்பட்ட பொதுச் சேவையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களால் கணக்காய்வு செய்யப்பட்டன.

இந்த அறிக்கை, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் வழங்கப்படுகின்றது.

### 1.2 வங்கிக்கான விசேட நிதியச் சட்ட ஏற்பாடுகள்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவினால் அவருக்க உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் 1992 மே 14 ஆம் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அப்போதைய நிதி அமைச்சரின் கட்டளையின் மூலம் சொல்லப்பட்ட நிதி அதிகாரச் சட்டத்தின் பகுதி II இன் ஏற்பாடுகளிலிருந்து வங்கிக்கு விலக்களிக்கப்பட்டது. அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டு 1992 ஏப்ரல் 10 ஆம் திகதிய ஈஏ02/பீசீ/பிபீ/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் மூலம் திறைசேரிச் செயலாளரால் அறிவிக்கப்பட்டவாறு வங்கியானது சகல திறைசேரி மற்றும் பொது நிருவாக சுற்றுநிருபங்களிலிருந்தும் விலக்களிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச்

சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளை கணக்காய்வு உள்ளடக்குகிறது. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். ஆகையினால் என்னுடைய அபிப்பிராயத்திற்கான பொருத்தமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்குகின்றதென நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைக்கமைய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கி முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்கள் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல்

என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வங்கியின் பங்குதாரர்களின் எண்ணங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### தொகுதி நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைத்தலிற்கான அடிப்படை

உள்நாட்டு வங்கியியல் பிரிவு, கரை கடந்த வங்கியியல் பிரிவு, இஸ்லாமிய வங்கி பிரிவு மற்றும் வெளிநாட்டு செயற்பாடுகள் ஆகிய வங்கியின் சம்பந்தப்பட்ட பகுதியாக உள்ளவற்றின் நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைப்பை வங்கியின் நிதிக்கூற்றுக்கள் கொண்டுள்ளது. தொகுதி நிதிக்கூற்றுக்கள், வங்கி மற்றும் அதனுடைய துணைக் கம்பனிகள் மற்றும் இணைக்கம்பனிகள் என்பவற்றின் நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைப்பை இலங்கை கணக்கீட்டு நியமங்களிங்கிணங்க (எஸ்எல்ஏஎஸ்) கொண்டுள்ளது.

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறானதும் முன்னைய ஆண்டின் முடிவிலுள்ளவாறானதுமான ஒவ்வொரு கம்பனியிலுமுள்ள வங்கியின் முதலீடுகளின் நிலைமை பின்வருமாறிருந்தன.

| கம்பனியின் பெயர் | முதலீடு | |
|---|---|---|
| | 2013 | 2012 |
| **துணைக் கம்பனிகள்** | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **விலை கூறப்பட்டது** | | |
| ஆதன அபிவிருத்தி பிஎல்சீ | 776 | 740 |
| இலங்கை மேக்கன்ரைல் வங்கி பிஎல்சீ | 2,123 | 2,123 |
| **விலை கூறப்பட்டாதது** | | |
| வரையறுத்த இலங்கை வங்கி முகாமைத்துவ மற்றும் துணைநிலைச் சேவைகள் (தனியார்) | 1 | 1 |
| வரையறுத்த இலங்கை வங்கி ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ (தனியார்) | 1,010 | 1,010 |
| வரையறுத்த இலங்கை வங்கி ரவல்ஸ் (தனியார்) | 2 | 2 |
| வரையறுத்த ஹொட்டேல் கொழும்பு (1963) | 101 | 101 |

| | | |
|---|---|---|
| வரையறுத்த இலங்கை மேக்கற் கடன் | 132 | 22 |
| வரையறுத்த இலங்கை நிதிச் சேவைகள் | - | 110 |
| வரையறுத்த இலங்கை வங்கி (U.K) | 2,684 | 2,684 |
| **துணைக் கம்பனிகளிலுள்ள மொத்த முதலீடுகள்** | **6,829** | **6,793** |
| **இணைந்த கம்பனிகள்** | | |
| **விலை கூறப்பட்டது** | | |
| வரையறுத்த டிரான்நெசனல் லங்கா பதிவேட்டு தீர்வுகள் (தனியார்) | 20 | 20 |
| வரையறுத்த சீ பாங் சொத்து முகாமைத்துவம் (தனியார்) | 31 | 31 |
| வரையறுத்த தென்பகுதி அபிவிருத்தி நிதிக் கம்பனி | 25 | 25 |
| வரையறுத்த மிரேக்கா கப்பிடல் லான் (தனியார்) | 750 | 750 |
| வரையறுத்த லங்கா பிணையங்கள் (தனியார்) | 42 | 42 |
| **இணைந்த கம்பனிகளிலுள்ள மொத்த முதலீடுகள்** | **868** | **868** |
| கழி: இழப்பீட்டிற்கான ஏற்பாடு | (25) | (25) |
| **இணைந்த கம்பனிகளிலுள்ள தேறிய முதலீடுகள்** | **843** | **843** |
| **மொத்த முதலீடுகள்** | **7,672** | **7,636** |

### 2.2.2 வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை

தரப்பட்ட தகவல்களின்படி, நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 55 இல் வெளிப்படுத்தப்பட்டவற்றைத் தவிர 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் வங்கியின் பணிப்பாளர்கள் எவரும் வங்கியுடனான ஒப்பந்தங்களெதிலும் நேரடியாகவே அல்லது மறைமுகமாகவோ அக்கறைகொண்டிருக்கவில்லை.

## 2.3 வங்கியின் நிதிக் கூற்றுக்கள் மீதானம் கருத்துறைகள்

### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்கேஏஸ்)

வங்கியானது ''அளவிடல் அடிப்படை மூலம் நிதிக்கருவிகளின் பகுப்பாய்வு'' என்ற வெளிப்படுத்தலின் கீழ் நிதி சார்பற்ற சொத்துக்களாக, வாடிக்கையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு காசோலைகளைக் கருத்திற்கொண்டிருந்தது. எனினும் எல்கேஏஸ் 39 இன் படி (நிதிசார் கருவிகள் - இனங்காணுதல் மற்றும் அளவீடு) அவை அளவீட்டு, அடிப்படை மூலம் நிதிக் கருவிகளின் பகுப்பாய்வின் கீழ் நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல்களில் கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டியவைகளாக கருதப்பட்டிருக்க வேண்டும்.

### 2.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு சுழற்சி முறை அடிப்படையில் ஒவ்வொரு ஏழு ஆண்டுகளிலும் இறையில் ஆதனம் மற்றும் குத்தகை ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும் கம்புறுபிட்டிய மற்றும் வீரகெட்டிய கிளைகளின் ஆதனங்கள் வங்கியால் மீளமதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்கள் தவிர்ந்த முற்றாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் முற்றாகக் காலக்கழிவு செய்யப்பட்ட கற்பனைச் சொத்துக்களான முறையே ரூபா 4.5 பில்லியன் மற்றும் ரூபா 1.38 பில்லியன் என்பவற்றை வங்கி கொண்டிருந்தது. இவை கணக்கீட்டுக் கொள்கைகளில் குறித்துரைக்கப்பட்டவாற மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தைக் கருத்திற்கொள்ளாது வங்கியால் பயன்படுத்தப்பட்டுவருகின்றது.

### 2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஒரு இந்தியக் கம்பனி பீஓசி ஈயூஆர் நொஸ்றோ கணக்கினூடாக யூரோ 691,893 தொகையை (அண்ணளவாக ரூபா 125 மில்லியன்) செலுத்தியிருந்தது. பின்னர் சம்பந்தப்பட்ட வங்கிக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்துரைகள் மோசடியானவை என்றும் வங்கியால் செயற்படுத்தப்பட்ட பணமாற்றங்களிற்கான அறிவுறுத்துரைகளுடன் இணக்கமாக உடன்பட்டிருக்கவில்லை என்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி முரண்பாடு காரணமாக, சம்பந்தப்பட்ட வங்கியின் கூற்று ரூபா 86 மில்லியன் சாதகமற்ற மீதியைக் காட்டியது. அதே நேரம் வங்கி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 39 மில்லியன் சாதகமான மீதியைக் காட்டியது

### 2.3.4 கணக்கிணக்கம் செய்யப்படாத மற்றும் இணங்காணப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பேரேட்டு மீதிகள் மற்றும் முறைமை உருவாக்கிய விபரமான ஐய வினா அறிக்கைகள் என்பவற்றிக்கிடையில் பின்வரும் கணக்கிணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| விபரம் | கிடைக்க வேண்டிய வட்டி | தொங்கலிலுள்ள வட்டி | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| **கடன்கள்** | | | |
| பேரேட்டின் படி மீதி | 2,990,097,087 | 5,471,763,145 | 8,461,860,232 |
| ஐய வினா அறிக்கையின் படி மீதி | 2,789,685,870 | 5,427,093,061 | 8,216,778,931 |
| வித்தியாசம் | 200,411,217 | 44,670,084 | 245,081,301 |
| **மேலதிகப் பற்றுக்கள்** | | | |
| பேரேட்டின் படி வட்டி | - | 2,986,011,773 | 2,986,011,773 |
| ஐய வினா அறிக்கையின் படி வட்டி | - | 2,897,296,204 | 2,897,296,204 |
| வித்தியாசம் | - | 88,715,569 | 88,715,569 |
| மொத்த வித்தியாசம் | 200,411,217 | 133,385,653 | 333,796,870 |

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட பகுதியினரின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) அறிக்கைகளில் காட்டப்பட்ட சம்பந்தப்பட்ட மீதிகளிற்குமிடையில் பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| கொடுக்கல் வாங்கல் வகை | நிதிக்கூற்றுக்களின் படி மீதி | இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் படி மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா, 000 | ரூபா, 000 | ரூபா, 000 |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 290,790,922 | 279,405,917 | 11,385,005 |
| வைப்புக்கள் | 113,565,125 | 112,665,130 | 899,995 |

(இ) இலங்கை மத்திய வங்கி பிரமாணங்களின் வேண்டுகைகளின் அடிப்படையில் இனங்காணப்பட்ட ரூபா 12.4 பில்லியன் தொகையான தொங்கல் வட்டி வருமானத்திற்கான நட்ட ஏற்பாட்டை வங்கி மேற்கொண்டிருந்தது. எனினும், ஐயவினா அறிக்கையின் அடிப்படையில் ரூபா 8.5 பில்லியன் தொகையான கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் மற்றும் மாலே கிளை கடன்கள் தொடர்பான பகுதி என்பன தொடர்பான தொங்கலிலுள்ள வட்டியை வங்கி இணங்கண்டிருந்தது. ரூபா 3.9 பில்லியன் வித்தியாசம் வங்கியால் விபரமாக இணங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 சனவரி 26 இல் டொயிஸ் வங்கி, அமெரிக்கா மற்றும் இலங்கை வங்கி லண்டன் (யூரோ கணக்கு) என்பவற்றிக்கு வங்கிக்கு இலங்கை மத்திய வங்கியினூடாக இரண்டு கணக்குகளிருந்து முறையே ஐ.அ.டொலர் 800,000 மற்றும் யூறோ 200,000 ஐ மாற்றுமாறு ஈரானில் ஒரு வங்கியை வங்கி அறிவுறுத்தியிருந்தது. 2012 பெப்ரவரியில் ஈரானிய வங்கியால் அனுப்பபபட்ட உலகலாவிய உள்ளக வங்கி நிதிசார் தொலைத் தொடர்பிற்கான (எஸ்டபிள்யூஐஎவ்ரீ) கூற்றுக்களின் படி வேண்டப்பட்ட நிதிகள் மாற்றப்பட்டதாகக் காட்டப்பட்டிருந்தது. எனினும், டொயிஸ் வங்கிக் கணக்கு மற்றும் பீஓசி லண்டன் கணக்குகளிற்கு நிதிகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை.

ஆகையால், மேற்படி இரு நிதி மாற்றங்களும் 2012 பெப்ரவரியிலிருந்து சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்குகளில் இணக்கம் செய்யும் விடயங்களாகக் காட்டப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கம் செய்யப்படாத மொத்த மீதி ரூபா 140,866,880 ஆக இருந்தது.

### 2.3.5 தொங்கல் கணக்குகள் மற்றும் நீண்டகால நிலுவையிலுள்ள மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாகிஸ்தான் வங்கிக் கணக்கிலுள்ள ரூபா 36,495,549 தொகையான நீண்டகால நிலுவையிலுள்ள காசு மீதியை காசு மற்றும் வங்கி மீதி உள்ளடங்கியிருந்ததுடன் அந்தக் கணக்கு மீதியை உறுதிப்படுத்துவதற்கு தெளிவான தொடர்புகளெதுவும் இருக்கவில்லை.

(ஆ) இறக்குமதி உண்டியல்கள் நாணயக் கடிதங்கள், கப்பல் உத்தரவாதங்கள் மற்றும் எல்சீ கப்பல் உத்தரவாதங்கள் என்பவற்றை வழங்குவதிலிருந்து சேகரிக்கப்பட்ட கட்டண வருமானம் ஏனைய செல்மதியாளரின் கீழ் கணக்கிடப்பட்டிருக்க வேண்டியதுடன் அந்த மீதிகள் ஆகக் கூடியது இரண்டு வாரங்களிற்கிடையில் வங்கியின் வருமானமாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்.

எனினும், பின்வரும் மீதிகள் ஒரு மாதத்திற்கும் மேலாகக் கணக்கில் இருந்ததுடன் சம்பந்தப்பட்ட கணக்குகளிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. ஆகையால் வங்கியின் வருமானம் ரூபா 493 மில்லியனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. அதன் காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| | **30 நாட்களுக்கு குறைந்த நிலுவை** | **31 தொடக்கம் 90 நாட்களிற்குட்பட்ட நிலுவை** | **மொத்தம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| மீதி | 400,748,505 | 38,301,379 | 439,049,884 |

### 2.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) 2008 இன் 03 ஆம் இலக்க இ.ம. வங்கி அறிவுறுத்துரையின் 4(5) | ஒரு தனியான கடன் பெறுநருக்கு வழங்கப்பட்ட செயல்பாடற்ற பல்துறைக் |

| | |
|---|---|
| ஆம் பிரிவு | கடன் வசதிகள் 30 சதவீதத்தை விஞ்சியிருக்க கூடாதென்ற போதிலும் இதனுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ஆ) 2010 சனவரி 15 ஆந் திகதிய 46/2010 ஆம் இலக்க அலுவலக சுற்றுநிருபம் (அலுவலக பணிப்புரையின் 2 வது பிற்சேர்க்கை) | ஒரு தனி வாடிக்கையாளர் மற்றும் தங்கம் மற்றும் ஆபரண வர்க்கத்தில் ஈடுபட்ட வாடிக்கையான ஒருவருக்கு ‘‘ரன்சுரக்கும் கடன் சேவை’’ அதிகூடிய கடன் தொகை எல்லை முறையே ரூபா 5 மில்லியன் மற்றும் ரூபா 10 மில்லியனக இருக்க வேண்டும் என்ற போதிலும் வங்கியானது சுற்றுநிருபத்தில் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளைக் கருத்திற்கொள்ளாது அடைவு முற்பணங்களை வழங்கியிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் (தொகுதி) ரூபா 16.1 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை பதிவு செய்திருந்ததை 2012 இன் ரூபா 20.2 பில்லியனுடன் ஒப்பிடலாம். அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 4.1 பில்லியன் அல்லது 20 சதவீதக் குறைவைக் காட்டுகின்ற அதே வேளை வங்கி பதிவு செய்திருந்த ரூபா 15.7 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை 2012 இன் 19.8 பில்லியனுடன் ஒப்பிடலாம் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 21 சதவீதம் குறைவாகும்.

வங்கியானது குறைந்த கடன் வளர்ச்சி காரணமாக ஆண்டின் போது மேலதிக திரவ நிலையை அனுமதித்திருந்ததுடன் அதன் விளைவாக முதலீட்டுப் பிணையங்களில் மேலதிக நிதிகள் முதலீடு செய்யப்பட்டிருந்தன. எனினும் 2013 இல் இருந்த குறைந்த வட்டி வீதங்கள் காரணமாக முதலீட்டுத் தொகுதியிலிருந்தான வட்டி வருமானம் ரூபா 23 மில்லியனிலிருந்து ரூபா 27 மில்லியனாக மட்டுமே அதிகரித்திருந்தது. 2012 இன் ரூபா 714 பில்லியனான மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஒப்பிடும் போது ரூபா 755 மில்லியனாக இருந்தது. அது 6 சதவீத வளர்ச்சியானதுடன் அரசாங்கம் மற்றும்

அரசுக்கு சொந்தமான முயற்சிகளிற்கு கடனளித்தல் 2012 இன் ரூபா 274 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 290 மில்லியன் வரை வளர்ந்திருந்தது.

(ஆ) செயற்பாடற்ற அடைவு முற்பணங்களின் அதிகரிப்புக் காரணமாக செயற்பாடற்ற கடன்தொகுதி, 2013 இல் அதிகரித்திருந்தது. 2013 இல் வங்கி ரூபா 2033 மில்லியன் உயர்ந்த இழப்பீட்டு கட்டண உள்ளீர்ப்பு அவசியமாக்கப்பட்ட துறையின் ஊடான தாக்கத்திற்குள்ளான அடைவு தொகுதி காரணமாக 2013 இலிருந்து தங்கத்தின் விலை குறைந்த போக்கிலுள்ளது.

ஆண்டின் போதான வங்கியின் தொழிற்பாட்டு செலவுகள் 2012 இன் ரூபா 20 பில்லியன் ஒப்பிடும் போது ரூபா 23 பில்லியனாக இருந்தது. அது 15 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் ஆளணி செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 14 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பல்வேறு கட்டங்களில் வங்கி மற்றும் தொகுதியின் நிதிசார் விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவனை தருகின்றது.

| | **வங்கி** | | **தொகுதி** | |
|---|---|---|---|---|
| | **2013** | **2012** | **2013** | **2012** |
| | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** |
| வட்டி வருமானம் | 114,863 | 95,022 | 119,504 | 98,751 |
| வட்டி செலவுகள் | (77,720) | (59,701) | (80,162) | (61,489) |
| தேறிய வட்டி வருமானம் | 37,143 | 35,321 | 39,342 | 37,262 |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 5,737 | 6,666 | 5,935 | 6,770 |
| வியாபாரத்திலிருந்து தேறிய இலாபம் /(நட்டம்) | 3,233 | 3,773 | 3,268 | 3.754 |
| நிதி முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம் / (நட்டம்) | 425 | 367 | 470 | 368 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 2,486 | 3,656 | 4,197 | 5,123 |

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த தொழிற்பாட்டு வருமானம் | 49,024 | 49,783 | 53,212 | 53,277 |
| கடன் மற்றும் ஏனைய நட்டங்களிற்கான நட்டம் (கட்டணங்கள்) /திருப்புதல் | (6,923) | (5,904) | (7,339) | (6,006) |
| தேறிய தொழிற்பாட்டு வருமானம் | 42,101 | 43,879 | 45,873 | 47,271 |
| மொத்த தொழிற்பாட்டு செலவுகள் | (23,681) | (20,870) | (27,241) | (23,789) |
| பெறுமதி சேர் வரிக்கு (வற் முன்னரான தொழிற்பாட்டு இலாபம் | 18,420 | 23,009 | 18,632 | 23,482 |
| நிதி சேவைகளில் பெறுமதி சேர் வரி (வற்) | (2,711) | (3,214) | (2,756) | (3,275) |
| பெறுமதிகள் வரிக்குப் பின்னரான தொழிற்பாட்டு இலாபம | 15,709 | 19,795 | 15,876 | 20,208 |
| வரிக்கு முன்னரான இணைக்கம்பனிகளின் இலாபம் (நட்டம்) பங்கு | - | - | 228 | 39 |
| வருமான வரிக்கு முன்னரான இலாபம் | 15,709 | 19,795 | 16,104 | 20,246 |
| வருமான வரிச் செலவு | (3,622) | (5,378) | (3,956) | (5,638) |
| ஆண்டிற்கான இலாபம் | 12,087 | 14,417 | 12,148 | 14,608 |

## 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

### முக்கியமான விகிதங்கள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான சில முக்கியமான விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | இலங்கை மத்திய வங்கியின் நியம அளவு | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|---|---|
| | | % | % | % | % | % | % |
| (அ) | மூலதன போதிய வீதம் (தட்டு 1) | 5.00 | 8.4 | 8.3 | 7.8 | 10.3 | 11.2 |
| (ஆ) | மூலதன போதிய வீதம் (தட்டு 2) | 10.00 | 12.1 | 11.5 | 10.9 | 13.7 | 14.2 |
| (இ) | வருமான வளர்சி | - | 15.7 | 56.3 | 11.2 | (0.2) | 5.5 |
| (ஈ) | சராசரி சொத்துக்களின் வருவாய் | - | 1.4 | 2.1 | 2.1 | 1.6 | 0.8 |
| (உ) | திரவத் தன்மை வீதம் | 20.0 | 27.7 | 21.8 | 23.4 | 28.7 | 21.1 |

இவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் வருமான வளர்ச்சி வீதம் 56.3 சதவீதத்திலிருந்து 15.7 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க குறைவாகும்.

(ஆ) வங்கியின் திரவத்தன்மை வீதம் 2011 இன் 23.4 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் 21.8 சதவீதமாகக் குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் 27.7 சதவீதமாக அதிகரித்திருந்தது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 கடன் நிருவாகம்

(அ) ஈடுவைக்கப்பட்ட பிணைகள் மற்றும் வாடிக்கையாளரின் கடன் தீர்க்கும் தன்மை என்பவற்றை முறையாக மதிப்பீடு செய்யாது சில கடன்கள் மற்றும் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமையை கணக்காய்வு தெரிவுச் செவ்வை

வெளிப்படுத்தியது. வாடிக்கையாளர்களின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் கம்பனிகளை நிறுவியமை தொடர்பான சட்டபூர்வ ஆவணங்கள் என்பன நேர காலத்துடன் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் முற்பணங்களின் கடிதத் தொடர்புக் கோவைகள் தொடர்புபட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்களுடன் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களிற்கெதிரான காப்புறுதிப் பத்திரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை முறையாகப் புதுப்பிக்கப்படவில்லை. ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களில் ஒழுங்கான பரீசீலனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட கடன் பெறுநரிடமிருந்து ஈடு செய்யும் கடிதங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

உ+ம் இரத்மலானை, மீரிகம, வெயாங்கொடை, நீர்கொழும்பு நகரம், யக்கல, பியகம மற்றும் கங்கவல்ல கிளைகள்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) பின்வரும் கிளைகளின் செயற்பாடற்ற முற்பணங்கள் (என்பீஏ) மீளாய்வாண்டில் உயர்ந்த சதவீதங்களைப் பிரதிபலித்திருந்தன.

| கிளையின் பெயர் | மொத்த முற்பணம் | மொத்த செயற்பாடற்ற முற்பணம் | மொத்த முற்பணத்தின் சதவீதமாக செயற்பாடற்ற முற்பணம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| இரண்டாவது கூட்டிணைவு | 2,474,771,941 | 2,340,238,141 | 94.56 |
| அச்சுவேலி | 1,250,535,407 | 555,454,759 | 44.41 |
| கிளிநொச்சி | 1,043,364,870 | 350,815,153 | 33.62 |
| பாணந்துறை | 2,165,529,408 | 491,733,335 | 22.70 |
| நுகேகொடை | 3,063,410,537 | 450,275,576 | 14.69 |
| பெரும்பாகம் | 7,670,314,822 | 817,350,823 | 10.65 |

(ii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதான பத்து வாடிக்கைகயாளர்களின் செயற்பாடற்ற முற்பணங்கள் ரூபா 2,877,663,707 கூட்டுமொத்தத் தொகையாகும்.

(iii) ரூபா 86,541,248 மற்றும் ரூபா 108,193,439 தொகையான முறையே நிலுவையிலுள்ள கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான முதல் மற்றும் வட்டி என்பன மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தன.

(iv) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆறு அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகளிற்கு வழங்கப்பட்ட கடன்கள் நீண்டகாலமாக செயற்பாடற்ற முற்பணங்கள் பிரிவில் இருந்தன. மொத்த நிலுவை ரூபா 697.34 மில்லியனாக இருந்தது. விபரங்கள் வருமாறு

| **கம்பனி** | **நிலுவையிலுள்ள முதல்** | **கிடைக்க வேண்டிய வட்டி** | **மொத்த நிலுவை** |
|---|---|---|---|
| | **ரூபா.மில்** | **ரூபா. மில்** | **ரூபா. மில்** |
| வ/ப கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் | 32.30 | 72.22 | 104.52 |
| வ/ப ஜனதா உர முயற்சிகள் | 51.72 | 234.92 | 286.64 |
| வ/ப பிரிட்டிஷ் சிலோன் கூட்டுத்தாபனம் | 101.34 | 189.24 | 290.58 |
| கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் | • 1.00 | - | 1.00 |
| வ/ப லங்கா சலுசல | • 1.00 | - | 1.00 |
| இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | 8.73 | 6.87 | 15.60 |
| மொத்தம் | 194.09 | 503.25 | 697.34 |

- கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் - பதிவழிக்கப்பட்ட தொகை ரூபா 100 மில்லியனாகும்
- * வ/ப லங்கா சலுசல - பதிவழிக்கப்பட்ட தொகை ரூபா 35 மில்லியனாகும்

**(ஆ) கடன் அட்டைகள்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டைகள் நிலையம் 66,496 கடனட்டைகளை வழங்கியிருந்ததுடன் அத்திகதியிலுள்ளவாறான மொத்த நிலுவையான மீதிகள் ரூபா 2,448,982,476 தொகையாகும். இதில் ரூபா 178,984,306 தொகை அல்லது 7.3 சதவீதம் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டது. மொத்த செயற்பாடற்ற முற்பணங்களின் விபரங்கள் பின்வருமாறிருந்தன.

| வகை | தொகை |
|---|---|
| | ரூபா |
| காலம் கடந்தவை | 10,801,643 |
| தரங்குறைந்தவை | 24,134,813 |
| ஐயத்திற்கிடமானவை | 19,956,451 |
| நட்டம் | 124,091,399 |
| மொத்தம் | 178,984,306 |

(ii) அட்டைகளைப் பெற்றதிலிருந்து 2013 திசெம்பர் 31 வரை ஒரு தவணைப் பணத்தைக் கூட செலுத்தாதிருந்த அட்டை உடமையாளரின் எண்ணிக்கை 95 ஆக இருந்ததுடன் மொத்த நிலுவைத் தொகை ரூபா 3,126,588 ஆக இருந்தது.

(iii) மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்ட முதல் மற்றும் வட்டி என்பன முறையே ரூபா 3,644,559 மற்றும் ரூபா 4,550,322 ஆக இருந்தன.

**(இ) குத்தகையிடல்**

குத்தகை வர்த்தகம் தொடர்பாக பின்வரும் கிளைகள் உயர்ந்த செயற்பாடற்ற முற்பணங்களைப் பதிவு செய்திருந்தன.

| கிளையின் பெயர் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை மீதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த செயற்பாடற்ற குத்தகை தொகை | மொத்த நிலுவையின் சதவீதமாக செயற்பாடற்றவை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| யூனியன் பிளோஸ் உயர்தரக் கிளை | 439,821,377 | 295,491,729 | 67 |
| தெஹிவளை உயர்தரக் கிளை | 116,447,301 | 70,307,397 | 60 |
| மாலபே | 161,494,821 | 63,828,544 | 40 |
| பண்டாரகம | 66,967,685 | 22,464,915 | 34 |
| அத்துருகிரிய | 78,459,871 | 20,413,774 | 26 |
| கடுவெல | 192,244,448 | 41,254,353 | 21 |
| பாணந்துறை உயர்தரக் கிளை | 118,674,381 | 21,230,420 | 18 |
| மீரிகம | 106,809,518 | 18,197,677 | 17 |
| கேகாலை உயர்தரக் கிளை | 154,277,997 | 17,598,033 | 11 |
| பெரும்பாகம் | 1,694,850,911 | 114,685,171 | 07 |

**(ஈ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கடனளித்தல்**

வங்கியானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு (சீபீசீ) பல இறக்குமதி வசதிகளை வழங்கியிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா 228.8 பில்லியனாக இருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியால் வழங்கப்பட்ட நிலுவையான இறக்குமதி கடன்வசதிகளின் 61 சதவீதத்தை இது பிரதி நிதித்துவப்படுத்துகின்றது என அவதானிக்கப்பட்டது.

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் தோற்றம் பின்வருமாறு

| **வசதியின் வகை** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இ.பொ.கூட் நிலுவை மீதி** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் மொத்த நிலுவை** | **மொத்த நிலுவையின் சதவீதம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| நாணயக் கடிதம் | 48,151,133,777 | 79,915,578,230 | 60 |
| ஏற்றுக் கொள்ளல் | 66,285,721,777 | 91,832,810,086 | 72 |
| வெளிநாட்டு நாணயக் கடன் | 114,348,135,600 | 205,600,247,169 | 56 |
| மொத்தம் | 228,784,991,154 | 377,348,635,485 | 61 |

**(உ) இழப்பீட்டைக் கணித்தல்**

(i) பின்வரும் தொகுதியின் கடன் இழப்பீட்டு ஏற்பாட்டைக் கணித்தலில் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஒழுங்குபடுத்தும் கடன் நட்ட ஏற்பாட்டை வங்கி பயன்படுத்தியிருந்தது.

| **கடன் வகை** | **2013.12.31 இல் உள்ளவாறான கடனின் காலக்கழிவுக்கிரயம்** |
|---|---|
| | **ரூபா** |
| புதிய திரண்ட கிராமிய கடன் திட்டம் | 541,658,863 |
| (என்பீஆர்சீஎஸ்) | 839,056,170 |
| **முடிவுறுத்தப்பட்ட ஆதனங்கள்** | |
| இஸ்லாமிய வங்கியியல் | 124,228,306 |
| கையால் தயாரிக்கும் கடன்கள் | 125,993,000 |

(ii) ஒழுங்குபடுத்தும் கடன் நட்ட ஏற்பாடு, நட்டத்துக்கான ஏற்பாடாகக் கருதப்பட்டிருந்ததுடன், மாலே கிளையினால் 2013 இன் நிதி அறிக்கையிடலில் பின்வரும் தொகுதிகளின் நிலையான நட்ட நடைமுறை பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை.

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சம்பந்தப்பட்ட தொகுதிகளின் மீதிகள் பின்வருமாறு இருந்தன.

| | |
|---|---|
| நாணய மாற்று உண்டியல்கள் | 681,165,476 |
| வியாபார நிதி | 793,437,202 |
| பதவியணியினர் கடன்கள் | 7,751,384 |

(ஊ) நட்டத்தை விளைவிக்கும் அரசுக்குச் சொந்தமான முயற்சிகளின் நட்ட மதிப்பீட்டில் கருதப்பட்ட நீடித்த கால மதிப்பீடுகள் மற்றும் எடுகோளழித்தல் அவசியம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் மொத்த கடன் தோற்றத்தின் அண்ணளவாக 38 சதவீதம் இலங்கை அரசாங்கம் மற்றும் அரசுக்குச் சொந்தமான முயற்சிகளிற்குக் (எஸ்ஓஈஎஸ்) கடனளித்ததைக் கொண்டனவாகும். நட்டத்தை மதிப்பிடலில் அவை அரசாங்கத்துடன் இணைக்கப்பட்டவை என்ற சூழ்நிலையில் நட்ட மற்றவையாக நட்ட நிபந்தனைகள் நிலவும் சில முக்கியமான அரசுக்கு சொந்தமான முயற்சிகளாக வங்கி கருத்திற்கொண்டிருந்தது. எனினும் திறைசேரி உத்தரவாதங்கள் அல்லது வேறு ஏதாவது பிணையங்களுடாக இந்தக் கடன்கள் போதியளவில் இணைக்கப்பட்டிருந்தன

(எ) நட்ட வீதங்களை மதிப்பிடுவதன் அவசியம் - வர்த்தக நிதிக் கடன்கள்

அண்ணளவாக ரூபா 970 மில்லியன் தொகையான கிளைகளால் வழங்கப்பட்ட வர்த்தக நிதிக் கடன்கள் ‘‘கைக் கடன்களாக’’ இக் கடன்கள் அமைக்கப்பட்டமை காரணமாக ஒருங்கிணைந்த மொத்த வங்கியில் முறைமையில் (ஐசீபீஎஸ்பீடி) பிடிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் இந்தக் கடன்களிற்காக காலப்பகுப்பாய்வு இருக்கவில்லை.

மேற்படியானவற்றைத் தவிர வர்த்தக நிதிதொகுதிக்காகப் பேணப்பட்ட வங்கி வர்த்தக முறைமை தேறிய ஓட்ட வீதங்களை (என்எவ்ஆர்) கணிப்பீடும் நோக்கில் வர்த்தக நிதிக் கடன்களின் காலப் பகுப்பாய்வை கைப்பற்றுவதற்கான வசதியளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, ஐசிபீஎஸ் முறைமையில் பேணப்பட்ட நட்ட மற்ற வாடிக்கையாளர் தனிப்பட்ட முக்கிய கடன்களிற்குப்

பிரயோகிக்க கூடிய சராசரி தேறிய ஓட்ட வீதங்களின் அடிப்படையில் வர்த்தக நிதித் தொகுதியினைக் என்எவ்ஆர் கணிப்பிடப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலக வளவிலுள்ள மத்திய காசப்பு பிரிவிற்காக போதிய காப்புறுதி மேவுகை இன்மை

மத்திய காசுக் கிளையிலுள்ள காசுக்கையிருப்புக்களின் காப்புறுதி மேவுகை ரூபா 1 பில்லியன் மாத்திரமேயாக இருந்தது. அதே நேரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையான காசுக் கையிருப்பு ரூபா 2.7 பில்லியனாகும். ஆகையால் மத்திய காசுக் கிளையிலுள்ள கையிருப்புக் காசிற்கான காப்புறுதி மேவுகை போதாமலிருந்தது.

(ஆ) வரையறுத்த இலங்கை வங்கி (யூகே) இலுள்ள முதலீட்டின் இழப்பீட்டு நட்டத்தை மதிப்பீடு செய்வதன் அவசியம்

வ/ப இலங்கை வங்கி (யூகே), வங்கிக்கு முழுமையாக சொந்தமான ஒரு உதவிக் கம்பனியாகும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீடு கொண்டுள்ள பெறுமதி ரூபா 2,683,859,000 ஆக இருந்ததுடன் முதலீட்டுக் கிரயத்திலும் பார்க்க குறைந்த நியாயமான பெறுமதியை கொடுக்கக் கூடியதாக பின்வரும் இழப்பீட்டுச் சுட்டிகள் உள்ளன. மேலும் கம்பனியின் இலாபமீட்டும் தன்மை தொடர்ச்சியாகப் வீழ்ச்சியுற்றிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

| காலம் | தொழிற்பாட்டு வருமானம் | வரிக்குப் பின்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) |
|---|---|---|
| | ஜீ.பீ.பி | ஜீ.பீ.பி |
| 2010.12.31 இல் முடிவடைந்த 8 மாத காலம் | 1,813,000 | 14,000 |
| 2011.12.31 இல் முடிவடைந்த ஆண்டு | 1,443,000 | (439,000) |
| 2012.12.31 இல் முடிவடைந்த ஆண்டு | 1,672,000 | (221,000) |

| | | |
|---|---|---|
| 2013.12.31 இல் முடிவடைந்த ஆண்டு | 1,528,000 | (422,000) |

நட்டங்களின் அதிகரிப்பு காரணமாக கம்பனி 2010 இல் அதன் ஆரம்பத்திலிருந்து பங்கிலாபத்தைச் செலுத்தும் நிலையிலிருக்கவில்லை.

(இ) கையாளும் அறை குரல் பதிவு செய்யும் முறைமை

---

முன்னனி அலுவலக கையாளும் தொலைபேசிகளிற்கு குரல் பதிவு செய்யும் முறைமை வங்கி பொருத்தியிருந்தது. ஆனால் விடயத்திலான முறைப்பாடு காரணமாக அது கேட்பதற்குமட்டுமேயாக இருந்தது.

உத்தரவு பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணயமாற்று வர்த்தகம் தொடர்பான இடர் முகாமைத்துவத்தில் 2009 இன் 3 ஆம் இலக்க மத்திய வங்கி வழிகாட்டலின் 4.1 (XIV) ஆம் இலக்க புள்ளி மூலம் வேண்டப்பட்டவாறு தொடர் அடிப்படையில் மத்திய அலுவலக இடர் முகாமைத்துவ பிரதேசத்திலுள்ள பதவிநிலைப்படுத்தப்பட்ட சுதந்திரமான அலுவலரால் இந்தப் பதிவு செயய்ப்பட்ட அழைப்புகள் கேட்கப்படவோ அல்லது கண்காணிக்கப்படவோ வேண்டும். எனினும், வங்கியானது இந்த வழிகாட்டலுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஈ) குத்தகையுடைமைக் காணிகளிற்கான குத்தகை உடன்படிக்கைகளின்மை

---

வங்கியானது 62 குத்தகை உடைமைக் காணிகளிற்கான சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தும் குத்தகை உடைமை உடன்படிக்கைகளைக் கொண்டிருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் வழங்கப்பட்ட கடிதங்கள் போன்றவாறான அலுவலகக் கடிதப் தொடர்புகள் கிடைத்திருந்ததுடன் சில விடயங்களில் அத்தகைய குத்தகைய ஆதனங்களைப் பயன்படுத்துவதற்கான போதிய உரிமை சான்றுகாளனதனயும் வங்கி கொண்டிருக்கவில்லை. அத்துடன் வங்கியானது 3 குத்தகை உடைமை ஆதனங்களிற்கான சட்டபூர்வ கட்டுப்படுத்தும் காரணி உறுதிகளையும் தன்வசம் வைத்திருக்கவில்லை.

(உ) குத்தகை வியாபாரத்தில் உள்ளீட்டு வரிகோருவதில் தாமதங்கள்

---

பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 22 (6) ஆம் பிரிவின்படி, வரி விலைப் பட்டியலின் திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்கள் முடிவடைந்த அன்றோ

அல்லது அதற்கு முன்னரோ உள்ளீட்டு வரி செலவு கோரப்பட வேண்டும். எனினும், சில கிளைகள் தலைமை அலுவலகத்திற்கு கோரிக்கை செய்வதற்காக குத்தகை வியாபாரம் தொடர்பான மூல வரி விலைப்பட்டியல்களை அனுப்புவதில் தாமதப்பட்டியிருந்தன. ஆகையால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அறவிடக்கூடியதாக இருந்த ரூபா 3,980,860 தொகையான காலங் கடந்த உள்ளீட்டு வரிகள் பேரேட்டு மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**4.3. பாராதூரமான மோசடிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அதிகாரமற்ற நிதி மாற்றங்கள்**

**பெரும்பாகக் கிளை**

(i) ஒரு மோசடிகாரனால் மேற்கொள்ளப்பட்ட மோசடியான வேண்டுகோளில் உள்நாட்டு தனியார் வங்கியிலுள்ள ஒரு சேமிப்புக் கணக்கிற்கு பெரும்பாகக் கிளையிலுள்ள இறந்த வாடிக்கையாளரொருவரின் என்ஆர்எவ்சி கணக்கிலிருந்து 2013 ஒக்தோபர் 13 இல் ரூபா 5.8 மில்லியன் தொகையை வங்கி மாற்றியிருந்தது.

ஆரம்பக் கட்ட விசாரைணகளின் காணிகளின் படி, கிளையின் சிரேஷ்ட முகாமையாளருக்கு தொடர்படுத்தாமல் கையொப்பம் வித்தியாசப்படுகிறது என்ற வாக்கியம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மேற்படி குறிப்பிடப்பட்டவாறு நிதி மாற்றத்தை செய்யும் போது முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் கூட்டாக தமது கடமைகளை கவனயீனமாக செய்திருந்தனர்.

மேற்கொண்டு விசாரணைகள் முன்கொண்டு செல்லப்படுவதுடன் விடயம் குற்ற விசாரணைத்திணைக்களத்திற்கு (சீஐடி) அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ii) ஒரு வாடிக்கையாளரால், அவரது நிலையான வைப்பிலிருந்து வங்கியால் செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 784,562 (வட்டியுடன்) தொகையான அதிகாரமற்ற நிதி மாற்றம் தொடர்பில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட வேண்டுகோள் மற்றும் ஏனைய கடிதத் தொடர்புகள் யாவும் ஈமெயிலூடாக அனுப்பப்பட்டிருந்தன. யூஏஈ

வங்கியின் பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவல மற்றும் பெரும்பாகக் கிளையின் வங்கி முகாமையாளர் தொலைபேசியூடாக வாடிக்கையாளரை மீள உறுதிப்படுத்த தவறியிருந்தனர். எனினும், வங்கி முகாமையாளர் உயர் அதிகாரரியிடமிருந்து மேற்கொண்டு பணிப்புரை பெற்றுக்கொள்ளாது நிதி மாற்றத்தை மேற்கொண்டிருந்தார். வங்கியானது வாடிக்கையாளரை முறையாக இணங்காணாது கவனயீனமான முறையில் சொல்லப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டிருந்தது.

**பிரத்தியேகக் கிளை**

------------------------------------

(i) வங்கியானது பிரத்தியேக கிளையிலுள்ள ஒரு வாடிக்கையாளரின் டீஎவ்சீ கணக்கிலிருந்து சைப்பிரசின் வங்கியிலுள்ள ஒரு கணக்கிற்கு உறுதிப்படுத்தப்படாத வழியில் ஒரு மோசடிக்காரரால் மேற்கொள்ளப்பட்ட மோசடியான வேண்டுகையில் ரூபா 11.1 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 86,384 ஆன நிதியை மாற்றியிருந்தது.

(ii) வங்கியானது பிரத்தியேகக் கிளையிலுள்ள ஒரு வாடிக்கையாளரிக் எஸ்எவ்ஐடிஏ (விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு) சேமிப்புக் கணக்கிலிருந்து சீன மற்றும் யூஏஈ லுள்ள வங்கியிலுள்ள கணக்கிற்கு வித்தியாசமான ஈமெயில்களைப் பயன்படுத்தி ஒரு வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்பட்ட மோசடியான வேண்டுகையில் ஐ.அ.டொலர் 70,000 மற்றும் ஜபீபீ 200,000 நிதிகளை மாற்றியிருந்தது. இந்த விடயத்தில் விசாரனைகள் செயன் முறைப்படுத்தப்படுகின்றன.

(ஆ) ரூபா 8 மில்லியன் பெறுமதியான தங்க ஆபரணங்களை அகற்றியமை பொகவந்தலாவ கிளை

------------------------------------------------------------------------------------------------------------------------------------

பொகத்தலாவ கிளையின் முகாமையாளராகக் கடமையாற்றிய அலுவலரால், நிலவறையில் வைக்கப்பட்ட வாடிக்கையாளரால் அடைவுவைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் மோசடியாக அகற்றப்பட்டன. அகற்றப்பட்ட ஆபரணங்களின் மொத்த முற்பணங்களின் கிரயம் அண்ணளவாக ரூபா 8 மில்லியனாக இருந்தது. வங்கியின் சேவையிலிருந்து முகாமையாளர் இளைப்பாறியிருந்தார் ஆனால் அவரின் ஓய்வூதிய நன்மைகள் வங்கியினால் தடுத்து வைக்கப்பட்டது. இந்த விடயம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (சீஐடி) அறிக்கையிடப்பட்டதுடன் விசாரணைகள் நடைபெற்றுகின்றன.

(இ) அடைவு முற்பணங்கள் மோசடியாக உருவாக்கியமை - போப்பிட்டிய கிளை

வங்கியின் கனிஷ்ட நிறைவேற்று அலுவலரால் முறைமையில் மோசடியாக அடைவு முற்பணங்கள் உருவாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 18 மில்லியன் மோசடி செய்யப்பட்டது. இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்ட சமயத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர் நாட்டை விட்டுச் சென்று விட்டதுடன் வங்கியின் சேவையிலிருந்து அலுவலர் இடைநிறுத்தப்பட்டுள்ளார். கவனயீனமான முறையில் கூட்டாக பணியாற்றிய முகாமையாளரும் வங்கியின் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டதுடன் ஒழுக்காற்று விசாரணைகளின் முடிவுக்கு காத்திருக்கப்படுகிறது. இந்த விடயம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (சீஐடி) அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ஈ) ரூபா 3 மில்லியன் பெறுமதியான தங்க ஆபரணங்கள் மாற்றப்பட்டமை – மகாகந்துற நீடிப்பு அலுவலகம்

மகாகந்துற கிளையில் முகாமையாளராக கடமையாற்றிய வங்கியின் அலுவலர் ஒருவர் வங்கியில் அடைவுவைக்கப்பட்ட தங்க நகைகளிற்குப் பதிலாக போலி நகைகளை மோசடியாக மாற்றியிருந்தார். அகற்றப்பட்ட தங்க ஆபரணங்களின் மொத்தப் பெறுமதி அண்ணளவாக ரூபா 3 மில்லியனாக இருந்ததுடன் அலுவலர் வங்கியின் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். மேற்கொண்டு விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் வங்கியின் தலைவருக்கு வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கைகள் மூலம் வங்கியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன் நிருவாகம்

(ஆ) கிளை நடவடிக்கைகள்

(இ) பதிவேட்டுப் பொருட்கள்

(ஈ) வைப்புக்கள்

(உ) வரி

(ஊ) முதலீடுகள்

(எ) கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணுதல்

(ஏ) தற்காலிக மேலதிகப் பற்று வசதிகள்